# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.NC2251/F/2019 & NC2365/2019 (SA501/F/2019)**

திரு M. சொக்கலிங்கம் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
நிலஎடுப்பு - தேசிய நெடுஞ்சாலை அலுவலகம்,
இராமநாதபுரம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 03.11.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 05.12.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 14.01.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 06.08.2019 |
| ஆணையத்தின் மனு நாள் | 26.09.2019 & 09.10.2019 |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 06.08.2019 ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு M. சொக்கலிங்கம் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக

திரு பால சரவணன், தனி வட்டாட்சியர்/நில எடுப்பு, தேசிய நெடுஞ்சாலை-49, இராமநாதபுரம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03.11.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்புவனம் வட்டம், திருப்பாச்சேத்தி வடக்கு குரூப் 32ல் உள்ள சர்வே எண்.106.2சி, பட்டா எண்.675ல் இரண்டாவது முறை NH49 நில எடுப்பு தேசிய நெடுஞ்சாலைக்கு எத்தனை சதுர மீட்டர் அளவு கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஒரு சதுர மீட்டருக்கு எவ்வளவு தொகை என்றும் மொத்த தொகை கணக்கிடப்பட்டு தனது கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும், நில எடுப்பு தொடர்பான அவார்டு நகல் மற்றும் தனக்கு சொந்தமான நிலம் சர்வே எண்.106/2C அருகில் நீர்நிலை வாய்க்கால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், அது எப்போது அகற்றித்தரப்படும் என்பது போன்ற ஆக்கிரமிப்பு தொடர்பான தகவல்களை 5 இனங்களில் வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர் அலுவலகம், நில எடுப்பு, தேசிய நெடுஞ்சாலை அலுவலகம், அலகு-1, மானாமதுரை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனு உரிய பொதுத் தகவல் அலுவலருக்கு பிரிவு 6(3)ன்படி 17.12.2018 தேதியிட்டு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. 24.12.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், நிலம் கையகப்படுத்தப்பட்டது தொடர்பாக விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் தொடர்புடைய ஆவணங்களுடன் 28.12.2018 அன்று காலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகத் தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய தகவலை பெற்று வழங்கவும் கேட்டு, 05.12.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை எனவும், தகவல் வழங்காத அலுவலர்களுக்கு உரிய தண்டனை வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 14.01.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 06.08.2019 நாளன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் பதிவு தபால் மூலம் இலவசமாக அனுப்பி வைக்கவேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிட்டது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 26.09.2019 மற்றும் 09.10.2019 தேதியிட்ட மனுக்களை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்து கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:-

- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 2 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் நேரிடையாக ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- மேல்முறையீட்டாளர் 03.11.2018 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.**

- **மேல்முறையீட்டாளர் 03.11.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.NC2251/F/2019 & NC2365/2019 (SA501/F/2019)**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/
சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
நிலஎடுப்பு - தேசிய நெடுஞ்சாலை அலுவலகம்,
இராமநாதபுரம்.

மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்
திரு M. சொக்கலிங்கம், த/பெ. முத்துராஜா,
எண்.938, படமாத்தூர் ரோடு,
திருப்பாச்சேத்தி, திருப்புவனம் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

**Copy to: Judgement File.**
**Spare/ JE/PA-16.11.2020**